சாத்தூர் நகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை திருமதி.ரா.ஜெகதீஸ்வரி

ந.க.எண்.126/2024/எப்1 நாள்: 22.03.2024

பொருள்: மனைப்பிரிவு அனுமதி – சாத்தூர் நகராட்சி – சர்வே வார்டு A, பிளாக் எண்.2 நகரளவை எண். 2/1A2, 2/6, 2/8 2/11 3/1A2B 3/3 மற்றும் 3/7 பழைய புல எண்.5/2A-ல் 2289 ச. மீ பரப்பளவில் உள்ள குடியிருப்பு மனைப்பிரிவு (நிரஞ்சனா கார்டனஸ்) இறுதி ஒப்புதல் வழங்கி உத்தரவிடுதல் – தொடர்பாக.

பார்வை:

1. துணை இயக்குநர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் விருதுநகர் ந.க.எண்.CJ5LSTGJ/2024/TCP நாள்:20.02.2024
2. சாத்தூர் சார்பதிவாளர் அலுவலக தானபத்திர ஆவண எண். 1190/2024 நாள்01.02.2024 மற்றும் சார்பதிவாளர் அவர்களின் அலுவலக சீர்திருத்தப் பத்திர ஆவண எண். 1662/2024 நாள்:13.02.2024
3. மனுதார்களது விண்ணப்பம் நாள்: 23.02.2024
4. இந்நகராட்சி பொறியார் அவர்களின் குறிப்பு நாள்: 12.03.2024

சாத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட சர்வே வார்டு A, பிளாக் எண்.2 நகரளவை எண். 2/1A2, 2/6, 2/8 2/11, 3/1A2B, 3/3 மற்றும் 3/7 பழைய புல எண்.5/2A-ல் 2289 ச. மீ பரப்பளவில் உள்ள குடியிருப்பு மனைப்பிரிவு (நிரஞ்சனா கார்டனஸ்) ஒப்புதல் கோரி திரு.பிரகாசம் என்பவர் இணையதளம் வாயிலாக அளித்துள்ள விண்ணப்பத்தின் பேரில் பார்வை 1-ல் கண்டுள்ள துணை இயக்குநர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் அவர்களின் கடிதத்தில் சாலை வடிவமைப்பு வரைபடம் ஒப்புதல் வழங்கப்பட்டது. மேற்படி அங்கீரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு வரைபட எண்.LP/DDTCP/VNR No.25/2024 -ல் மனைப்பிரிவு இசைவு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி ஒப்புதல் வழங்கப்பட்ட வரைபடத்தில் உள்ள சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு இடத்தினை சாத்தூர் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண். 1190/2024 நாள்01.02.2024 மற்றும் சீர்திருத்தப் பத்திர ஆவண எண். 1662/2024 நாள்:13.02.2024-ம் தேதிய ஆவணம் மூலம் நகராட்சிக்கு தானமாக பெறப்பட்டு மேற்படி சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு இடங்கள் நகராட்சி ஆணையாளர் பெயருக்கு பெயர் மாற்றம் செய்யப்பட்டு சாத்தூர் நகர்மன்றத்தின் 412 எண்ணிட்ட 11.03.2024-ம் தேதிய தீர்மானத்தின்படி நகராட்சி அசையாச் சொத்து பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

எனவே நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், விருதுநகர் அவர்களால் மனைப்பிரிவு இசைவு ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு இறுதி ஒப்புதல் அளித்து உத்திரவிடப்படுகிறது.

ஆணையாளர்

சாத்தூர் நகராட்சி

22/3/2024

இணைப்பு

. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் விருதுநகர் அவர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் மற்றும் நிபந்தனைகள்

பெறுநர்:

திரு.பிரகாசம்

7/9 சேர்மன் பி.கே.எஸ்.ஏ ஆறுமுகம் ரோடு,

சிவகாசி.